# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,162 — 1960 ජූලි 22 වැනි සිකුරාදා — 22.7.1960

12,162 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | — |
| விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 575 |
| மாநுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### விசர் நாய்க்கெடுதி

விசர் நாய்களைப் பற்றிய சட்டத்தின் 11 ம் பிரிவு, 333 ம் அதிகாரத்தின் பிரகாரம் வதுளை, பண்டாரவளை, அப்புத்தளை நகர சபைகளின், வெளிமடை, பஸ்ஸரை பட்டின சபைகளின் எல்லைகளுக்குள் தவிர வதுளை வருமான டிஸ்திறிக்கில் ஏனைய இடங்களில் விசர் நாய்க்கெடுதி இருக்கிறதென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

மேற் சொல்லப்பட்ட பகுதியிலுள்ள எந்தப் பிரசித்த இடத்திலாவது அல்லது வீதியிலாவது, அல்லது ஊரவர்க்குரிய கட்டிடம், வளவு, தோட்டம் அல்லாத வேறெந்த இடத்திலாவது கட்டப்பட்டிராமலும் அல்லது ஒருவரால் நடத்திக்கொண்டு போகப்படாமலுங் காணப்படும் எந்த நாயையும் உடனே கொல்லப்பட ஏதுவாகும்.

இந்த விளம்பரம் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 13 திகதி தொடக்கம் ஆறு மாதகாலம் வரைக்கும் அமுலில் நிற்கும்.

பீ. பி. வீ. எ. ஜே. பி. சேனரட்ன,
வதுளை அரசாங்க மாவட்ட அதிபதி.

கச்சேரி, வதுளை,
1960 ம் ஆடு ஜூலை மீ 13 ந் உ.

---

### இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

#### புகையிரதக் கடவைத் திருத்தங்கள்

மட்டக்களப்புத் திருக்கோணமலைப் புகையிரத வீதியில், தம்பலகாமம், சையினுபே ஆகிய இரு புகையிரத நிலையங்களுக்குமிடையில், 170 மையில் 26 சங்கிலியில் குறுக்கிடும் பிரதான கண்டி வீதியில் 100¼ மையிலில் உள்ள புகையிரதக்கடவை திருத்துவதற்காக மேற்படி வீதி 23.7.60 சனிக்கிழமை பிற்பகல் 6 மணி தொடக்கம் 24.7.60 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிவரை வாகனப் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும்.

மேற் குறிப்பிட்டுள்ள காலத்தில் வாகனப் போக்குவரத்துகள் நடைபெறுவதற்கேற்ற மாற்று ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

---

### இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

#### புகையிரதக் கடவைத் திருத்தங்கள்

களனிப் பள்ளத்தாக்குப் புகையிரதப்பாதையில், கொட்டா ரேட் நாருயன்பிட்டிய ஆகிய இடங்களுக்கிடையில், 3 மையில் 9 சங்கிலி 30 லிங்ஸ்சில் குறுக்கிடும் மானிங் ரவுணில் உள்ள புங்கள வீதியிலுள்ள புகையிரதக்கடவை திருத்துவதற்காக மேற்படி வீதி 23.7.60 சனிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 10 மணிவரை ஒருபகுதி மூடப்பட்டுப் பின்னர் அன்று மாலை 10 மணி தொடக்கம் 24.7.60 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிவரை முழுவதும் மூடப்பட்டிருக்கும்.

மேற்குறிப்பிட்டுள்ள காலத்தில் வாகனப் போக்குவரத்துகள் நடைபெற வேறு பாதைகள் இல்லாதபடியால், இவ்வீதியாலேயே வாகனப் போக்கு வரத்துகள்யாவும் நடைபெறுவதற்கு இவ்வேலைக்கு அதிபரான இரும்புப்பாதை வேலையாள் மூகாரி தகுந்த ஒழுங்குகள் செய்து கொடுப்பார்.

---

### இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

#### புகையிரதக் கடவைத் திருத்தங்கள்

புதிதாக அமைக்கவிருக்கும் புகையிரத வீதியில், வங்கடேனிய, பத்துலு ஓயா ஆகிய இரு இடங்களுக்குமிடையில், 56 மையில் 56 சங்கிலியில் குறுக்கிடும் அரசாங்க கட்டுவேலைப் பகுதியினரின் கொழும்பு—புத்தளம் வீதியில் 54 மையில் 65·38 சங்கிலியிலுள்ள முன்னைய புகையிரதக்கடவை திருத்துவதற்காக மேற்படி வீதி 6.8.60 சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் 7.8.60 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 வரை வாகனப் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும்.

மேற் குறிப்பிட்டுள்ள காலத்தில் வாகனப் போக்குவரத்துயாவும் தற்காலிகமாக இவ்விடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் புகையிரதக்கடவையின் ஊடாக நடைபெறலாம்